டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 25.10.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 106 | Madurai | Online Edition

# மதுரை, தேனி, திண்டுக்கல்லுக்கு ரெட் அலர்ட்!

## தஞ்சை, கோவை உள்ளிட்ட 14 மாவட்டங்களுக்கு மிக கனமழை வாய்ப்பு!!

சென்னை, அக்.24

வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களுக்கு இன்று (அக்.25) அதி கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளி யிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மத்திய கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி 'ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றுள்ளது. இது மேலும் வலுப்பெற்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக அதே பகுதிகளில் நிலவக்கூடும்.

மேலும் இது மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து வலுப் பெற்று, இன்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், 26-ம் தேதி மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் புயலாகவும் மாறக்கூடும். இது மேலும் மேற்கு, வட மேற்கு திசையில் நகர்ந்து, மேலும் வலுப்பெற்று மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் ஆந்திரப் பிரதேச கடலோரப்பகுதிக்கு அருகில் 28ம் தேதி காலை நகரக்கூடும்.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (அக்.25) மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய அதி கனமழை (ரெட் அலர்ட்) பெய்யக்கூடும்.

கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், திருச்சி, கரூர், நீலகிரி, கோவை, திருப்பூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் ஒரு சில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கன முதல் மிக கனமழை (ஆரஞ்சு அலர்ட்) பெய்யக்கூடும்.

திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கன மழை பெய்யக்கூடும். தென்காசி, தூத்துக்குடி, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

அக்.26-ம் தேதி சிவகங்கை, ராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும்.

நீலகிரி, கோவை, தேனி, மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழையும், இதர தமிழகத்தில் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (அக்.25) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான அல்லது கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தயார்நிலை உணவுகள் தயாரித்தல் பயிற்சி

கோயம்புத்தூர், அக்.24

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தயார்நிலை உணவுகள் தயாரித்தல் பயிற்சி 28.10.26 மற்றும் 29.10.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்சி நிலையம் (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, மருதமலை சாலை வழி) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் நடைபெறும்.

கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- தோசை மிக்ஸ்
- அடை மிக்ஸ்
- டேக்ளாமிக்ஸ்
- பிசிபெலா பாத்மிக்ஸ்
- கீர் மிக்ஸ்
- குளோப் ஜாமூன் மிக்ஸ்
- ஐஸ்கீரிம் மிக்ஸ்
- தக்காளி சாதம் மிக்ஸ்
- சூப் மிக்ஸ்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1,500 + GST 18%)- பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 94885 18268, 0422 6611340, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# நடமாடும் மண் நீர் பரிசோதனை ஆய்வு முகாம்



சேலம், அக்.24

சேலம் மாவட்டம், வாணியம்பாடி கிராமத்தில் 22.10.26 அன்று நடைபெற்றது. பனமரத்துப்பட்டி வேளாண்மை உதவி இயக்குனர் சாகுல் ஹமீது தலைமை வகித்தார். இதில் வாணியம்பாடி ஊராட்சிக்குட்பட்ட 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்களது நிலங்களில் இருந்து மண் மற்றும் ஆழ்துளை கிணறுகளில் இருந்து தண்ணீர் மாதிரிகளை எடுத்து வந்து வேளாண் துறை நடமாடும் ஆய்வக பரிசோதகர் எம்.மதியழகனிடம் கொடுத்தனர். மாதிரிகள் கொடுத்த விவசாயிகளுக்கு எந்த வகையான பயிர் செய்தால் அதிகமாக மகசூல் கிடைக்கும், நிலத்துக்கு எந்த வகையான உரங்களை தெளிக்க வேண்டும் என விளக்கி கூறினர். இதில் வேளாண்மை அலுவலர் மு.சங்கீதா, உதவி வேளாண்மை அலுவலர் சுதிர் மற்றும் பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் லோகேஷ், மணிவாசகர், மதன், மதன்ராஜ், முகேஷ் குமார், முகில்தர்ன், முத்து சீனி சிதம்பரம், நந்தகுமாரன், நட்ராஜ் ஆகியோர் பங்கேற்றனர். முகாமில் வேளாண் துறையின் சார்பில் மண் நீர் பரிசோதனைகளை ஏன் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான விழிப்புணர்வு பலகைகள் விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

# விளை நிலம் காப்போம் இயக்கம்



சேலம், அக்.24

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டாரம், பேளூர் கிராமத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர் வேளாண் இணை இயக்குநர் சீனி வாசன் கலந்து கொண்டு விளை நிலங்களை காக்க இயற்கை வேளாண் மற்றும் பசுந்தாள் உரத்தின் நன்மைகள் வேளாண்மை துறையில் செயல்படுத்தபடும் திட்டங்கள் மற்றும் சொட்டுநீர் பாசன நன்மைகள் பற்றி விரிவாக எடுத்து கூறினார் மற்றும் பயிர் காப்பீடு திட்டங்கள் மற்றும் வட்டார அளவில் செயல் படுத்தபடும் திட்டங்கள் பற்றி விரிவாக கூறினார். வட்டார தொழில் நுட்ப மேலாளர் அற்புத வேலன் உதவி தொழில்நுட்ப மேலாளர் நந்தகுமார் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் சங்கர், பிரபா, மற்றும் 50க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# காருண்யா நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் வேளாண் அறிவியல் மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகள்




கோயம்புத்தூர், அக்.24

கோயம்புத்தூர் மாவட்டம், காருண்யா நிகர்நிலை பல்கலைக் கழகம், தனது 40-வது ஆண்டு நிறைவு விழா மற்றும் உழவர் விழா 2026-ன் ஒரு பகுதியாக 'அக்ரிஸென் ஹேக்கத்தான்' என்ற போட்டியை நடத்தியது. இந்த ஹேக்கத்தான் போட்டி தன்னியக்க பயிர் ஆரோக்கியம் மற்றும் வள மேலாண்மைக் கான ஸ்மார்ட் விவசாய சாதனங்கள் என்ற கருப்பொருளின் கீழ் நடத்தப்பட்டது. இரண்டு கடுமையான சுற்றுகளின் முடிவில், சிறந்த எட்டு அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

இதில், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான நேரடிச் சந்தைத் தொடர்பு மற்றும் ஸ்மார்ட் விநியோகச் சங்கிலி குறித்த திட்டத்திற்காக நந்தி பல்லே பார்த்தும் தலைமையிலான அணி முதல் பரிசையும், ருயல்ஆர்தட்டன் தலைமையிலான அணி பசுமைக் குடில்களுக்கான லிடார் (LiDAR) தொழில்நுட்பம் சார்ந்த தன்னியக்க காற்று சுத்திகரிப்பு மற்றும் நோய் தடுப்பு ரோபோவை உருவாக்கி இரண்டாம் பரிசைப் பெற்றது.

தங்களது அசாத்திய திறமையை வெளிப்படுத்திய இரண்டாம் பரிசு பெற்ற அணி, தொடர்ந்து 23 அக்டோபர் 2026 அன்று வேலூரில் உள்ள பாலார் வேளாண் கல்லூரியில் நடைபெற்ற மற்றொரு ஹேக்கத்தான் போட்டியிலும் பங்கேற்று முதலிடம் பிடித்து, ரூ.5,000 ரொக்கப் பரிசையும் தட்டிச் சென்றது. ஒட்டு மொத்தமாக, இந்த நிகழ்வு மாணவர்களின் படைப்பாற்றல், தொழில் முனைவோர் திறன் மற்றும் நிலையான, தொழில் நுட்பம் சார்ந்த விவசாயத்தை நோக்கிய பல்துறை கண்டு பிடிப்புகளை வளர்ப்பதற்கான ஒரு சிறந்த தளமாக அமைந்தது.

# பரந்தன்தாங்கல் கிராமத்தில் 'வயலைக் காப்போம்' விழிப்புணர்வு நிகழ்ச்சி!



விழுப்புரம், அக்.24

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டார வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில், 'கேத் பச்சாவோ அபியான்' (Khet Bachao Abhiyan) எனும் 'வயலைக் காப்போம்' இயக்கத்தின் கீழ், பரந்தன்தாங்கல் கிராமத்தில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சரவணன், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) விஜயகுமார், செஞ்சி வேளாண்மை உதவி இயக்குநர் விஜயசந்தர், வேளாண்மை அலுவலர் செந்தில் நாதன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் புவனேஸ்வரி ஆகியோர் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

விவசாய நிலங்களின் மண் வளத்தைப் பாதுகாத்தல், மண் பரிசோதனையின் அடிப்படையில் உரமிடுதல், ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைப் பரிந்துரைக்கப்பட்ட அளவில் பயன்படுத்துதல், நீர் வளத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், மண் அரிப்பைத் தடுத்தல் மற்றும் நிலையான வேளாண்மை முறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றின் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இதன் மூலம் மண் வளத்தை மேம்படுத்தி, உற்பத்திச் செலவைக் குறைத்து, நீண்ட காலத்திற்கு நிலையான மகசூல் பெற முடியும் என விளக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் ஸ்ரீதேவி மற்றும் உதவித் தொழில்நுட்ப மேலாளர்கள் ஜெயகணேஷ், கவிதா ஆகியோர் செய்திருந்தனர். இதில் பரந்தன்தாங்கல் கிராம விவசாயிகள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மீன் வளர்ப்புப் பண்ணையைப் பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருவாரூர், அக்.23

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், திருவிடைச்சேரி கிராமத்தில் அமைந்துள்ள மீன் வளர்ப்புப் பண்ணையை வேளாண் கல்லூரி மாணவர்கள் அக்டோபர் 23ஆம் தேதி நேரில் பார்வையிட்டு, மீன் வளர்ப்பு முறைகள் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் பொருளாதாரப் பயன்கள் குறித்து விரிவாக அறிந்து கொண்டனர்.

சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இப்பண்ணையில், கட்லா (Catla), ரோகு (Rohu) உள்ளிட்ட பல்வேறு வகையான மீன்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

பண்ணை உரிமையாளர் மீன் வளர்ப்பின் முக்கியத்துவம், மீன் இனங்களைத் தேர்வு செய்தல், குளம் பராமரிப்பு மற்றும் மீன்களுக்குத் தேவையான தீவன மேலாண்மை ஆகியவை குறித்து மாணவர்களுக்கு விளக்கினார்.

மேலும், கட்லா மற்றும் ரோகு போன்ற நன்னீர் மீன் இனங்களின் வளர்ச்சிப் பண்புகள், அவற்றுக்குத் தேவையான நீரின் தரத்தைப் பராமரித்தல், மீன்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல் மற்றும் முறையான தீவன மேலாண்மை மூலம் உற்பத்தியை அதிகரித்தல் போன்ற நடைமுறைகள் குறித்தும் மாணவர்கள் தெரிந்து கொண்டனர்.

மீன் வளர்ப்பில் முதலீடு செய்வது, உற்பத்திச் செலவுகளைக் கட்டுப்படுத்துவது, சந்தைத் தேவைக்கு ஏற்ப மீன்களை விற்பனை செய்வது மற்றும் வாடிக்கையாளர்களை அணுகுவது போன்ற மீன் வணிகம் தொடர்பான பல்வேறு ஆலோசனைகளையும் பண்ணை உரிமையாளர் மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

இந்தக் களப்பயணத்தின் மூலம், மீன் வளர்ப்பை ஒரு சிறந்த வேளாண் சார்ந்த தொழிலாக மேற்கொள்ளும் வாய்ப்புகள், மீன் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைகள், தொழில்முனைவுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள் ஆகியவற்றைப் பற்றி மாணவர்கள் நடைமுறை அறிவைப் பெற்றனர்.

இக்கள ஆய்வு, வேளாண் மாணவர்களுக்கு மீன் வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பின் மூலம் வருமானம் ஈட்டுவதற்கான தொழில்முனைவு வாய்ப்புகளை அறிந்து கொள்ள உதவியது.

# மானாவாரி ஒருங்கிணைந்த பண்ணைய முறை குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கப் பயிற்சி




பெரம்பலூர், அக்.24

பெரம்பலூர் மாவட்டம், சிறுவயலூர் கிராமத்தில் திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு மாணவிகள் வ.அபிதா, செ.தேவதர்ஷினி, ச.தனலெட்சுமி, ச.ஹரிணி, ஜா.செ.ஹெலீனா ஜாண், சே.ஜெயஸ்ரீ, ர.பி.காவியா, ச.சுபிக்ஷா, வி.வித்யா மற்றும் ப.யுவராணி ஆகியோர், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, மாணவிகள் டி.களத்தூர் கிராம விவசாயிகளுக்கு மானாவாரி ஒருங்கிணைந்த பண்ணைய முறை (ம்ஷெதீயிழிஜ ணூஜமிளஆஷெழிமிள ய்ழிஷெதுஷ்ஜஆ றீதீவிமிளது) குறித்து செயல்விளக்கப் பயிற்சி அளித்தனர். மானாவாரி நிலங்களில் கிடைக்கும் குறைந்த அளவு மழைநீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், வேளாண் இடுபொருள் செலவுகளைக் குறைப்பதற்கும் ஒருங்கிணைந்த பண்ணைய முறையின் முக்கியத்துவம் குறித்து மாணவிகள் விளக்கினர்.

இச்செயல்விளக்கப் பயிற்சியானது மானாவாரி வேளாண்மையில் கிடைக்கும் வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், நிலையான வேளாண்மையை ஊக்குவிக்கவும் உதவும் வகையில் அமைந்தது மட்டுமின்றி, மாணவிகள் விவசாயிகளின் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவுபடுத்தினர்.

# கரும்பில் குருத்து மாவுப்பூச்சி மற்றும் பொக்கா போங்குநோய் தாக்குதலை கட்டுப்படுத்திட ஆலோசனை

புதுக்கோட்டை, அக்.24

புதுக்கோட்டை வட்டார விவசாயிகள் கரும்பு சாகுபடியில் குருத்து மாவுப்பூச்சி மற்றும் பொக்கா போங்குநோய் தாக்குதலை கட்டுப்படுத்திட மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பாவது, புதுக் கோட்டை வட்டாரத்தில் கரும்பு சாகுபடி 55 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை வட்டாரத்தில் கரும்பு பயிரானது நடவு மற்றும் மறுதாம்பு பயிர்களாக சாகுபடி மேற் கொள்ளப்பட்டு வருகிறது. வட்டார விவசாயிகள் கரும்பு சாகுபடியில் குருத்து மாவுப்பூச்சி மற்றும் பொக்கா போங்குநோய் தாக்குத லினால் ஏற்படும் மகசூல் இழப்பை தவிர்த்திட ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடித்து கட்டுப்படுத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**கரணை நேர்த்தி :** ஒரு லிட்டர் தண்ணீருக்கு புரோபிகனசோல் 25 இசி என்ற மருந்து 1 மிலி அளவில் கலந்து 30 நிமிடமும் மேலும், ஒரு லிட்டர் தண்ணீருக்கு இமிடாகுளோபிரிட் 17.5 எஸ்எல் என்ற மருந்து 0.3 மிலி என்றளவில் கலந்து 5 நிமிடம் விதை கரணை களை ஊறவைக்க வேண்டும். தொடர்ந்து வயலில் எறும்பு நடமாட் டத்தை கவனிக்க வேண்டும். உடனடியாக எறும்பின் இயக்கத்தை கவனித்த பிறகு தனியாக மூன்று எல்லை வரிசைகளில் இமிடா குளோபிரிட் 17.8 எஸ்எல் என்ற மருந்தை 3 மிலி (அல்லது) குளோ ரோடிரனிலிப்ரோல் 18.5 எஸ்சி என்ற மருந்து 4 மிலி (அல்லது) கிளாதினிடின் 50 டபுள்யூடிஜி 5 கி (அல்லது) ஸ்பைரோடெட்ராமெட் 150 ஒடி 12.5 மிலி (அல்லது) பிளானிகேமிட் 50 டபுள்யூஜி 3 கி இதில் ஏதேனும் ஒன்றை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கரும்பு பூஸ்டர் 1 கிகி, 1.5 கிகி மற்றும் 2 கிகி என்ற அளவில் கரும்பு நடவு செய்த 45, 60, 75 நாட்களுக்கு பிறகு முறையாக இட வேண்டும்.

பொருளாதார வரம்பு நிலையான 10 சதவீதம் மாவுப்பூச்சி தாக்குதல் தென்பட்டால், புரோபிகனசோல் 25 இசி 1 மிலி மற்றும் இமிடாகுளோபிரிட் 17.8 எஸ்எல் 0.3 மிலி ஆகியவற்றுடன் ஒட்டும் பசை 1 மிலி அளவில் 1 லிட்டர் நீரில் கலந்து நட்ட 3 ஆம் மாதத்தி லிருந்து 20 நாட்கள் இடைவெளியில் 3 முறை தெளிக்கவும்.

தெளிப்பதற்கு முன் தோகை அகற்றுதலை உறுதி செய்யவும். பரிந்துரைக்கப்பட்ட அளவு உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களை ஒவ்வொரு மறுதாம்பு பயிர்க்கு பிறகும் மண் அணைக்கும் போது இட வேண்டும். கரும்பு பயிரில் காணப்படும் வேர்புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்திட ஏக்கருக்கு ஒரு விளக்குப்பொறி மே முதல் ஜூலை மாதம் வரை வைத்து முதிர்ந்த வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம். 10 லிட்டர் தண்ணீருக்கு 7 மிலி இமிடாக்குளோப்பிரிட் 17.8 சதவீதம் எஸ்எல் கலந்து அதனை தாக்கப்பட்ட பயிரின் தூர்பகுதி நன்கு நனையும்படி ஊற்றி கட்டுப்படுத்தலாம் என புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கரும்பு சாகுபடி குறித்து ஆலோசனை தெரிவித்துள்ளார்.



# வாழைக்கு முட்டு கொடுத்தல் ஏன் அவசியம்?

பலத்த காற்று மற்றும் மழை, புயல் போன்ற இயற்கை பேரிடர்களால் எதிர்பாராது விழைவு ஏற்பட்டு வாழை மரங்கள் சாய்ந்து ஒடிந்து விடும். அதுவும் குலையுடன் ஒடிந்தால் ஏகப்பட்ட பொருளாதார நஷ்டம் விவசாயிக்களுக்கு ஏற்படும். வாழைக் கன்று நட்டாலே முட்டு கொடுப்பது என்பது வானிலை நிலவரங் களை தெரிந்து கொண்டு தர வேண்டும்.




### முட்டு கொடுப்பது எப்படி?

வாழை மரங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒரு மரத்திற்கு முட்டுக்கொடுக்க ஒரு கழி (கம்பு) தேவைப்படும். அது பெரும்பாலும் சவுக்கு மரமாகவோ மூங்கில் கழியாகவோ அல்லது அகத்தி கழியாகவோ இருக்கலாம். சவுக்கு என்றால் குறைந்த பட்சமாக 3-4 ஆண்டுகள் வரை முட்டு கொடுக்க பயன்படுத்தலாம். இவை 100லிருந்து 150 ரூபாய் வரை விலையில் வாங்கலாம். ஆனால் அகத்தி கம்பு விலைக்குறைவு பயன்பாடும் அவ்வளவாக இருக்காது. ஏனெனில் முட்டு கொடுக்கும் மரங்கள் நீரில் (ஈரத்தில்) தான் வாழைத்தோட்டத்தில் நிற்கும்.

### முட்டு கொடுக்கும் முறைகள்?

#### 1) மூங்கில் / சவுக்கு முட்டு

இந்த முறையில் வாழை மரத்தின் ( குலைக்கு ) எதிர்புறமாக முட்டு கொடுக்க வேண்டும். இதற்கு மூங்கில் / சவுக்கு கட்டைகளை ஊன்றி முட்டு கொடுக்க வேண்டும். முட்டுவின் அடிப்பகுதி சாயாமல் இருக்க மண் அணைக்க வேண்டும்.

**2) கயிற்றால் இணைத்து கட்டுதல்**

வாழை மரங்களை ஒன்றுடன் ஒன்று கயிற்றால் இணைத்து கட்ட வேண்டும். நடுவில் ஆப்பு அடித்து கயிற்றால் கட்டலாம் அல்லது ஒரு மரத்தின் அடிப்பகுதியை அடுத்த மரங்களுடன் இணைத்து கயிற்றால் கட்டலாம்.

**3) கட்டு கம்பி / பிளாஸ்டிக் நாடா**

ஒவ்வொரு மரத்தின் கழுத்தில் 1 அடி உயரத்தில் மணிக்கயிறு கட்டவும். நான்கு திசைகளிலும் 1.8 காஜ் கட்டுக்கம்பி / பிளாஸ்டிக் நாடாவால் கட்டவேண்டும். ஓரங்களில் உள்ள மரங்களை தரையில் அப்பு அடித்து (ஸ்டே கம்பி போல) இழுத்து பலமாக கட்டவும். இது நேந்திரன், கதலி போன்ற வாழை இரகங்களுக்கு சிறந்தது. வானிலை எச்சரிக்கை, புயல் காற்று வருமுன் முட்டு கொடுக்க வேண்டும். அப்படி இருந்தால் வாழைமரம் சாயாது.

**முட்டு கொடுக்கும் போது கவனிக்க வேண்டியவை**

1) குலை தள்ளும் நிலையில் உள்ள மரங்களுக்கு முன்கூட்டிய முட்டு கொடுக்க வேண்டும்.

2) முட்டு கொடுக்க மூங்கில், சவுக்கு அகத்தி போன்ற கழி கம்புகளை பயன்படுத்தலாம்.

3) முட்டு மரத்தின் அடிப்பகுதியில் நன்றாக மண் அணைக்கவும், இல்லாத பட்சத்தில் சாய்ந்து விடும்.

4) சித்திரை சுழி (ஏப்ரல்– மே) மாதங்களில் வாழை பாதுகாக்க நடவு பருவத்தை மாற்றி அமைக்கவும்.

**வாழை முட்டு கொடுக்க அரசு திட்டம் என்ன?**

தமிழக வேளாண் பட்ஜெட்ல 2026–27யில் 6.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் 6175 ஏக்கர் பரப் பளவில் இத்திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நிதி உதவி பெற சம்மந்தப்பட்ட தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம்.

வாழை விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டு கொடுத்தால் வளமாக வாழலாம் வருமானத்துடன்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# விளைநிலம் காப்போம் இயக்க முகாம்!




திருவள்ளூர், அக்.24

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டத்தின் சார்பில், காரணி கிராமத்தில் 'விளைநிலம் காப்போம் இயக்கம் மற்றும் மண்வளம், ஊட்டச்சத்து மேலாண்மை' குறித்த விவசாயி களுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. இம்முகாமிற்கு வேளாண்மை துணை இயக்குநர் பால்ராஜ் தலைமை வகித்தார்

மண் பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் பயிர் களுக்குத் தேவையான பேரூட்டச் சத்துக்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களை அளிக்க வேண்டும். இதன்மூலம் ரசாயன உரங்களின் பயன்பாட்டையும் விவசாயச் செலவு களையும் குறைத்து, மண்ணின் வளத்தையும் சுற்றுச் சூழலையும் பாதுகாக்கலாம் என அறிவுறுத்தப்பட்டது. மேலும், துணை வேளாண்மை அலுவலர் ம.ரமேஷ், உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள், இயற்கை இடுபொருட்கள் மற்றும் இயற்கை பூச்சி விரட்டிகளைப் பயன்படுத்துவதன் அவசியம் குறித்து விளக்கினார்.

உதவி விதை அலுவலர் ரா.யுவராஜ், விதை பண்ணை அமைத்தல், உரங்களைப் பயிர்களுக்குத் தேவையான அளவில் பிரித்து வழங்குவதன் மூலம் மண்ணில் ரசாயனக் கழிவுகள் தேங்குவதைத் தவிர்க்கலாம் என்று தெரிவித்தார்.

உதவித் தொழில்நுட்ப மேலாளர்கள் வே.அன்பு மற்றும் வெ.இளையராஜா ஆகியோர் உயிர் உரங்களின் பயன்பாடு, இயற்கை இடுபொருட்கள் தயாரிக்கும் முறைகள், விவசாய அடையாள அட்டை பதிவு செய்தல் ஆகியவை குறித்து விளக்கினர். முன்னோடி விவசாயிகள் தங்களது அனுபவங் களைப் பகிர்ந்து கொண்டனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நிலையான தோட்டக்கலைக்கல்வி பயிற்சியில் மாணவர்களின் கிராமத்தங்கல் திட்டம் மற்றும் பங்களிப்பு

தோட்டக்கலை இந்திய விவசாயத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். பழங்கள், காய்கறிகள், பூக்கள், மசாலாப் பொருட்கள், தோட்டப் பயிர்கள் மற்றும் மருத்துவத் தாவரங்கள் விவசாய வருமானத்தை உயர்த்துகின்றன, ஊட்டச்சத்தை மேம்படுத்துகின்றன, மேலும் குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்றன. இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய எதிர் காலத் தோட்டக்கலை நிபுணர்களுக்குப் பயிற்சி அளிக்க, வகுப் பறைக் கற்றலை விட மேலான ஒன்று தேவைப்படுகிறது. கிராமப்புற விவசாயத்தின் யதார்த்தங்களைக் குறித்த நடைமுறை அனுபவமும் இதற்குத் தேவை.

இளங்கலைப் தோட்டக்கலைப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியான கிராமப்புறத் தோட்டக்கலைப் பணி அனுபவத் திட்டம் (RHWE), மாணவர்களுக்கு இந்த அனுபவத்தை வழங்குகிறது. மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கிராமப்புறச் சூழலில் தங்கிப் பணியாற்று கிறார்கள். அங்கு அவர்கள் தோட்டக்கலை நிறுவனங்களின் அன்றாட நடவடிக்கைகளில் பங்கேற்கிறார்கள், விவசாயிகளுடன் நேரடியாக உரையாடுகிறார்கள், மேலும் உள்ளூர்ச் சூழல்களில் பண்ணைத் தொழில்நுட்பங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைக் காண்கிறார்கள். விவசாயக் குடும்பங்களின் சமூக-பொருளாதாரப் பின்னணி, உள்ளூர் பயிர் சாகுபடி முறைகள், வளக் கட்டுப்பாடுகள், மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கும் விவசாயிகள் உண்மையில் பின்பற்றுவதற்கும் இடையிலான இடைவெளி ஆகியவற்றை மாணவர்கள் புரிந்துகொள்ளவும் இத்திட்டம் உதவுகிறது.

## முக்கியத்துவம் மற்றும் பயன்கள்

### நடைமுறைதிறன் வளர்ப்பு பயிற்சி

நாற்று வளர்ப்பு, ஒட்டுதல் மற்றும் அரும்பு ஒட்டுதல், கத்தரித்தல் மற்றும் பயிற்சி அளித்தல், நீர்ப்பாசனம் மற்றும் உரப்பாசனம், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, அறுவடை, தரம் பிரித்தல் மற்றும் பொதி செய்தல் போன்றவற்றை மாணவர்கள் செய்து கற்றுக் கொள்கிறார்கள். இவை விரிவுரைகள் மற்றும் ஆய்வக செய்முறைப் பயிற்சிகளால் முழுமையாகக் கற்பிக்க முடியாத திறன்களாகும்.

**விவசாயிகளின் பிரச்சனைகளை புரிந்து கொள்ளுதல்**

கிராமத்தில் வாழ்வது, தொழிலாளர் பற்றாக்குறை, தண்ணீர் பற்றாக்குறை, உள்ளீட்டுச் செலவுகள், பூச்சி மற்றும் நோய் பாதிப்பு, விலை ஏற்ற இறக்கங்கள் மற்றும் பலவீனமான சந்தை அணுகல் போன்ற விவசாயிகள் எதிர்கொள்ளும் உண்மையான தடைகளை மாணவர்களுக்குக் காட்டுகிறது.




**தொழில்நுட்பப் பரிமாற்றம்**

பரிந்துரைக்கப்பட்ட தொழில் நுட்பங்கள் உள்ளூர்ச் சூழல்களில் எவ்வாறு செயல்படுகின்றன, விவசாயிகள் அவற்றை ஏன் ஏற்றுக் கொள்கிறார்கள் அல்லது நிராகரிக்கிறார்கள், மேலும் மேம் படுத்தப்பட்ட நடைமுறைகளை எவ்வாறு திறம்பட வெளிப்படுத்துவது என்பதை மாணவர்கள் அறிந்துகொள்கிறார்கள்.

**விரிவாக்கம் மற்றும் தகவல் தொடர்புத் திறன்கள்**

விவசாயிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்களுடனான நேரடித் தொடர்பு, தகவல் தொடர்பு கொள்ளும் திறன், செவிமடுக்கும் திறன், மற்றும் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு போன்ற கருவிகளைச் செயல்படுத்தும் திறனை வளர்க்கிறது.

**சமூக பொருளாதாரப் புரிதல்**

மாணவர்கள் கிராமப்புற வாழ்வாதாரங்கள், பண்ணைப் பொருளா தாரம், விவசாயக் குழுக்கள், கடன் மற்றும் சந்தைப்படுத்தல் வழிகள், மற்றும் தோட்டக்கலையில் பெண்களின் பங்கு ஆகிய வற்றைப் பற்றி அறிந்து கொள்கிறார்கள்.

**உள்ளூர் விவசாயிகள் மற்றும் அவர்கள் சார்ந்த அமைப்புகள் பற்றி புரிதல்**

மாணவர்கள் பழங்குடி அறிவு, பிராந்தியத்திற்கே உரிய பயிர் சாகுபடி முறைகள் மற்றும் இடர்களை விவசாயிகள் மற்றும் அவர்கள் சார்ந்த அமைப்புகள் அதனை எவ்வாறு கையாளு கிறார்கள் என்பதைக் கற்றுக்கொள்கிறார்கள்.

**தனிப்பட்ட மற்றும் தொழில் முறை வளர்ச்சி**

இந்த அனுபவம் சுயசார்பு, குழுப்பணி, சூழ்நிலைக்கேற்ப மாறும் தன்மை மற்றும் விவசாய சமூகங்கள் மீதான பொறுப்புணர்வை வளர்க்கிறது. மேலும், இது மாணவர்கள் விரிவாக்கம், தொழில் முனைவு, வேளாண் வணிகம் அல்லது ஆராய்ச்சி போன்ற துறை களில் தங்கள் தொழில் வாழ்க்கையைத் தீர்மானிக்க உதவுகிறது.

## கிராம விவசாயநிலைகளில் முன்னேற்றம் மற்றும் பயன்கள்




மாணவர்கள் விவசாயிகளுக்குப் புதுப்பிக்கப்பட்ட அறிவைக் கொண்டு வருகிறார்கள், மேலும் அவர்களின் அறிவார்ந்த அவதானிப்புகள் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்திற்கான சிக்கல்களைக் கண்டறிய உதவுகின்றன. சுருக்கமாக, தோட்டக்கலை மாணவர்களின் (RHWE) நடைமுறை அறிவும், கள அனுபவமும் கொண்ட தோட்டக்கலை நிபுணர்களாகத் தயார்படுத்துகிறது. அவர்கள் அறிவியல் அறிவை விவசாயிகளின் தேவைகளுக்கு ஏற்ற தீர்வுகளாக மாற்ற முடியும். இதன் மூலம் தோட்டக்கலை சாகுபடி மேம்பாடு அடைவதோடு வளரும் இளந்தலை முறையினருக்கு தோட்டக்கலை சார்ந்த அறிவும் அவர்களின் தனிப்பட்ட தொழில் முறை அறிவும் வளர்வதோடு எதிர்கால தொழில் முனைவோராக அல்லது உற்பத்தியினை பெருக்கும் சிறு மற்றும் பெருவிவசாயிகளாக வாழ்க்கையில் வெற்றிபெற செய்கிறது. இதன் அடிப்படையில் ஆர்.வி.எஸ். பத்மாவதி தோட்டக்கலை கல்லூரி இறுதியாண்டு மாணவ-மாணவிகள் தேனி மாவட்டம் சின்னமனூர், உத்தமபாளையம் மற்றும் கம்பம் பகுதிகளில் தங்கி விவசாயிகளிடமும் அந்த பகுதி வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்களுடன் இணைந்து நேரடி பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதனை கண்காணிக்கும் பொறுப்பு உதவி பேராசிரியர்கள் முனைவர் இ.நிவேதா, முனைவர் ஆர்.பிரியதர்சன், முனைவர் ராகுல் பாண்டியன், முனைவர் எஸ்.சீமான் சேதுபதி மற்றும் முனைவர் பெ.மணிமாறன் ஈடுபட்டுள்ளனர்.

கட்டுரை ஆசிரியர்கள் : *முனைவர் பெ.முரளி சங்கர், (உதவிப் பேராசிரியர்) நோயியல் துறை, முனைவர் இ.நிவேதா, (உதவிப் பேராசிரியர்) மண்ணியல் துறை, முனைவர் ஆர்.பிரியதர்சன், (உதவிப் பேராசிரியர்) பூச்சியியல் துறை, முனைவர் எஸ்.சீமான் சேதுபதி, (உதவிப் பேராசிரியர்) விதை அறிவியல் துறை, முனைவர் ராகுல் பாண்டியன் மற்றும் முனைவர் பெ.மணிமாறன், (உதவிப் பேராசிரியர்) தோட்டக்கலைத் துறை, ஆர்.வி.எஸ்.பத்மாவதி தோட்டக்கலை கல்லூரி, செம்பட்டி.*



# சோளப் பயிரில் மீன் உணவுப் பொறி குறித்து வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம்

திருச்சி, அக்.24

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் நாளந்தா வேளாண் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு மாணவிகள் மா.ஹரிணி, அ.பராசக்தி, மு.பிரியதர்ஷினி, சே.பிரியதர்ஷினி, நா.ஸ்ரீவித்யா, பா.சுபர்ணா, ஹ.தஸ்லீமா நஸ்ரின், ச.வைஷ்ணவி, ச.ஞா.யுவஸ்ரீ



மற்றும் ச.ஞா.யுவஸ்ரீ ஆகியோர், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, மாணவிகள் தி.ரெங்கநாத புரம் கிராம விவசாயிகளுக்கு சோளப் பயிரில் மீன் உணவுப் பொறி (Fish Meal Trap) குறித்து செயல்விளக்கம் அளித்தனர்.




சோளப் பயிரில் இளம் செடிகளைத் தாக்கும் தண்டுத் துளைப்பான் ஈயைக் கட்டுப்படுத்த மீன் உணவுப் பொறி பயன்படுவது குறித்து மாணவிகள் விவசாயிகளுக்கு விளக்கினர். மீன் உணவின் வாசனையால் ஈர்க்கப்பட்டு ஈக்கள் பொறியில் சிக்கிக் கொள்வதால், பூச்சிகளின் எண்ணிக்கையைக் குறைக்க உதவுகிறது. மேலும், பொறியைத் தயாரிக்கும் முறை, அதனைப் பயன்படுத்தும் விதம் மற்றும் பூச்சிகளைக் கண்காணிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்து, இத்தகைய எளிய பூச்சி மேலாண்மை முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் சோளப் பயிரில் பூச்சித் தாக்கத்தைக் குறைத்து, பயிரைப் பாதுகாக்க முடியும் என்று தெரிவித்தனர்.

## பொதுமக்களின் பங்கேற்புடன் அகரவேள்குடி கிராம வரைபடம் தயாரித்த கீழ்வேளூர் வேளாண் மாணவிகள்!

நாகப்பட்டிணம், அக்.24

நாகப்பட்டிணம் மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவ, மாணவிகளின் கிராமப்புற வேளாண் அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, அகரவேள்குடி கிராமத்தில் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டின் (Participatory Rural Appraisal – PRA) கீழ் கிராம வரைபடம் தயாரிக்கப்பட்டது.இந்நிகழ்வின்போது ஏராளமான கிராம மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வரைபடத்தைப் பார்வையிட்டனர். மாணவர்கள் கிராம வரைபடம் குறித்து மக்களுக்கு விளக்கமளித்தனர். கிராம மக்களும் தங்கள் ஊரில் உள்ள முக்கிய இடங்கள், பொது வசதிகள் மற்றும் பிற வளங்களின் இருப்பிடங்களைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொண்டனர். இதன் மூலம் மாணவர்கள் கிராமத்தின் அமைப்பு மற்றும் உள்ளூர் வளங்களைப் பற்றி மக்களின் பங்கேற்புடன் அறிந்து கொண்டனர்.

# நானோ விழிப்புணர்வு முகாம்

தஞ்சாவூர், அக்.24

தஞ்சாவூர் மாவட்டம், கக்கரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் (PACCS) இப்கோ சார்பில் நானோ உரங்கள் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது.






இந்நிகழ்ச்சியில், இப்கோ உதவி கள அலுவலர், இப்கோ நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி. மற்றும் சாகரிகா திரவ உரங்களைப் பயன்படுத்துவதன் நன்மைகள் மற்றும் அவற்றை இலைவழித் தெளிப்பு முறையில் பயன்படுத்தும் வழிமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். நானோ உரங்கள் உரப் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்கவும், பயிர்களின் வளர்ச்சி மற்றும் மகசூலை மேம்படுத்தவும் உதவும் விதம் குறித்தும் விளக்கினார். தொடர்ந்து, இப்கோவின் சங்கட் ஹரன் பீமா யோஜனா திட்டத்தின் கீழ், நானோ உரங்களை வாங்கும் விவசாயி களுக்கு ரூ. 2,00,000 வரை விபத்துக் காப்பீடு வழங்கப்படுவது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், இனி தங்கள் வயல்களில் இப்கோ நானோ உரங்களைப் பயன்படுத்துவதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# விளை நிலம் காப்போம் விவசாயிகள் விழிப்புணர்வு முகாம்



வேளாண் துறையில் இயங்கும் ஆத்மா திட்டத்தின் மூலமாக திருவெண்ணைநல்லூர் அடுத்த காரப்பட்டு கிராமத்தில் விளைநிலம் காப்போம் இயக்கம் என்ற தலைப்பில் உரங்களின் சமச்சீர் பயன்பாடு இயற்கை வழி வேளாண்மை இயற்கையின் பலத்தை பயன்படுத்தி நஞ்சு இல்லா உணவையும் ஆரோக்கியத்தையும் உறுதிப்படுத்துவோம் ஒவ்வொரு துளி நீரும் விலை மதிப்பற்றது நீரை சிக்கனமாக பயன்படுத்துவோம் காடுகள் வளர்ப்போம் மண்ணை பாதுகாப்போம் என்ற முழக்கத்தோடு விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

# வீணாக்காதே வளமாக்கு – தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி!

சிவகங்கை, அக்.23

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றியத்தில், சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன மாணவிகளான பா.மகேஸ்வரி, சு.சந்தியா, செ.யாழினி, க.விவேகா, கு.கீர்த்தனா, செ.ஸிவ ஸ்ரீ மற்றும் செ.ராஜேஸ்வரி ஆகியோர் இணைந்து, தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு – வீணாக்காதே வளமாக்கு என்ற தலைப்பில் கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில், மக்கும் மற்றும் மக்காத கழிவுகள் குறித்து மாணவர்களுக்கு எளிய முறையில் விளக்கப்பட்டது. காய்கறித் தோல்கள், பழத்தோல்கள் மற்றும் மீதமான உணவுப் பொருட்கள் போன்ற சமையலறைக் கழிவுகளை (Kitchen Waste) முறையாகப் பயன்படுத்தி இயற்கை உரம் தயாரிக்கும் முறை எடுத்துரைக் கப்பட்டது. மேலும், பிளாஸ்டிக் மற்றும் டின் போன்ற மக்காத கழிவுகளை மறுசுழற்சி செய்து மீண்டும் பயனுள்ள பொருட்களாக மாற்றும் முறைகள் குறித்தும் விளக்கப்பட்டது.

பிளாஸ்டிக் கழிவுகள் மண்ணில் சேர்வதால் மண்ணின் வளம் பாதிக்கப்படுவதுடன், நீர் ஊடுருவும் தன்மையும் பாதிக்கப்படலாம் என்பதை மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர். தொடர்ந்து, சமையலறைக் கழிவுகளைத் தனியாகச் சேகரித்தல், உலர்ந்த இலைகளுடன் கலந்து அடுக்குதல் மற்றும் அவற்றை முறையாக மக்கச் செய்து இயற்கை உரமாக மாற்றுதல் போன்ற நடைமுறைகள் விளக்கப்பட்டன.

மேலும், கழிவுகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாகப் பிரித்தல், மறுசுழற்சி செய்தல், சமையலறைக் கழிவுகளிலிருந்து இயற்கை உரம் தயாரித்தல் போன்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடைமுறைகளை மாணவர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

சமையலறைக் கழிவுகளை உரமாக்குவோம்; கழிவுகளை வளமாக்குவோம்; சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்! என்ற விழிப்புணர்வுச் செய்தியுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# நெற்பயிரில் குள்ளமாகும் செடிகள் : துத்தநாகக் குறைபாட்டின் அறிகுறிகளும் தீர்வுகளும்

நெற்பயிரில் உரமிட்டும் செடிகள் எதிர்பார்த்த அளவுக்கு வளராமல் குள்ளமாக இருக்கின்றனவா? இலைகளில் பழுப்பு நிறப் புள்ளிகள் தோன்றுகின்றனவா? தூர்கள் குறைந்து, பயிர் வளர்ச்சி மந்தமாக உள்ளதா? இவை அனைத்தும் துத்தநாகம் (Zinc) என்ற நுண்ணூட்டச்சத்துக் குறைபாட்டின் அறிகுறிகளாக இருக்கலாம். நெற்பயிரில் இக்குறைபாடு மகசூலைப் பாதிக்கக்கூடிய முக்கியமான ஊட்டச்சத்துப் பிரச்சினையாகும்.



### 1. துத்தநாகம் – சிறிய அளவு, பெரிய பணி!

தாவரங்களுக்கு நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற பேரூட்டச்சத்துகள் அதிகளவில் தேவைப்படுகின்றன. துத்தநாகம் போன்ற நுண்ணூட்டச் சத்துகள் மிகக் குறைந்த அளவில் தேவைப் பட்டாலும், அவற்றின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. துத்த நாகம் நெற்பயிரில் பல நொதிகளின் செயல்பாடு, வளர்ச்சி ஹார்மோன்களின் உருவாக்கம், புரத உற்பத்தி மற்றும் இயல்பான வளர்ச்சி ஆகியவற்றில் பங்கேற்கிறது. எனவே, மண்ணில் துத்தநாகம் போதுமான அளவில் கிடைக்கா விட்டால், பயிரின் வளர்ச்சியும் தூர்களின் எண்ணிக்கையும் பாதிக்கப்படலாம்.

### 2. துத்தநாகக் குறைபாட்டை எப்படிக் கண்டறிவது?

நடவு செய்த சுமார் 2 – 3 வாரங்களுக்குப் பிறகு துத்தநாகக் குறைபாட்டின் அறிகுறிகள் தென்படலாம். இருப்பினும், மண் மற்றும் பயிர் நிலையைப் பொறுத்து அறிகுறிகள் தோன்றும் காலம் மாறுபடும். இலைகளில் சிறிய மஞ்சள் புள்ளிகள் தோன்றி, பின்னர் பழுப்பு அல்லது துரு நிறப் புள்ளிகளாக மாறலாம். இளம் இலைகளின் அடிப்பகுதியில் வெளிர் மஞ்சள் அல்லது பழுப்பு நிற மாற்றங்கள் காணப்படலாம். பயிர் குள்ளமாகவும் வளர்ச்சி சீரற்றதாகவும் காணப்படும்.

செடிகளில் பக்கத் தூர்கள் குறைவதால் கதிர்களின் எண்ணிக் கையும் பாதிக்கப்படலாம். குறைபாடு தீவிரமாக இருக்கும்போது கதிர்களில் மணிகள் உருவாவது மற்றும் மணிகள் நிரம்புவது பாதிக்கப்படலாம். இந்த அறிகுறிகள் துத்தநாகக் குறைபாட்டைச் சந்தேகிக்க உதவினாலும், அவற்றை மட்டும் வைத்து உறுதிப்படுத்த

முடியாது. பிற ஊட்டச்சத்துக் குறைபாடுகள், வேர் பாதிப்புகள் மற்றும் மண் சார்ந்த பிரச்சினைகளும் இதுபோன்ற அறிகுறிகளை ஏற்படுத்தலாம்.

**3. மண்ணில் துத்தநாகம் இருந்தும் பயிருக்குக் கிடைக்காதது ஏன்?**

மண்ணில் சத்துகள் இருப்பது மட்டுமே போதாது; அவை வேர்களால் உறிஞ்சக்கூடிய வடிவில் இருக்க வேண்டும்.

**அதிக காரத்தன்மை :** அதிக pH கொண்ட மண்ணில் துத்தநாகத்தின் கிடைப்புத்திறன் குறையலாம்.

**சுண்ணாம்புச் சத்து அதிகமுள்ள மண் :** இத்தகைய மண்ணில் துத்தநாகக் குறைபாடு ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

**தொடர்ந்து நீர் தேங்கியிருத்தல் :** நெல் வயலில் நீண்டகால நீர்த்தேக்கம் மண்ணின் வேதியியல் நிலையை மாற்றி, துத்தநாகத்தின் கிடைப்புத்திறனைக் குறைக்கலாம்.

**அதிகப்படியான பாஸ்பரஸ் உரமிடுதல் :** தேவைக்கு அதிகமாக பாஸ்பரஸ் இடுவது துத்தநாகக் குறைபாட்டைத் தூண்டக்கூடும்.

எனவே, மண் பரிசோதனையின் அடிப்படையில் உரமிடுவது மிகவும் அவசியம்.

**4. துத்தநாகக் குறைபாட்டைச் சரி செய்வது எப்படி?**

துத்தநாகக் குறைபாட்டைச் சரி செய்ய, மண் பரிசோதனை மற்றும் வேளாண் துறைப் பரிந்துரைகளுக்கு ஏற்ப பின்வரும் முறைகளைப் பயன்படுத்தலாம்.

**மண்ணில் துத்தநாக சல்பேட் இடுதல்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பொதுப் பரிந்துரையின்படி, ஹெக்டேருக்கு 25 கிலோ துத்தநாக சல்பேட் (ZnSO) பயன்படுத்தலாம். நடவுக்கு முன் இறுதி உழவின்போது, தேவையான அளவு மணலுடன் கலந்து வயலில் சீராகப் பரப்பலாம்.

**இலைவழி தெளிப்பு**

குறைபாடு பயிரில் தென்பட்டால், 0.5% துத்தநாக சல்பேட் கரைசலைப் பயன்படுத்தலாம். அதாவது, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் துத்தநாக சல்பேட். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வழிகாட்டியில் 15 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு : தயாரிப்பின் வகை, பயிரின் நிலை மற்றும் உள்ளூர் பரிந்துரைக்கு ஏற்ப கரைசல் தயாரிக்கும் முறையை உறுதிப் படுத்தவும். சில பரிந்துரைகளில் சுண்ணாம்பு அல்லது யூரியா சேர்ப்பது குறிப்பிடப்பட்டிருப்பதால், அவற்றைத் தன்னிச்சையாகக் கலக்க வேண்டாம்.

**மண் பரிசோதனை மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை**

மண்ணின் pH, கிடைக்கக்கூடிய துத்தநாகத்தின் அளவு மற்றும் பிற ஊட்டச்சத்துகளின் நிலையை அறிந்து உரமிட வேண்டும். பசுந்தாள் உரம், நன்கு மக்கிய தொழு உரம் போன்ற வற்றைப் பயன்படுத்துவதும் மண் வளத்தை மேம்படுத்த உதவும்.

**முக்கிய எச்சரிக்கை :** துத்தநாக சல்பேட்டின் அளவு அதன் வகையைப் பொறுத்து மாறுபடும். 21% துத்தநாகம் கொண்ட ஹெப்டாஹைட்ரேட் மற்றும் 33% துத்தநாகம் கொண்ட மோனோஹைட்ரேட் தயாரிப்புகளை ஒரே அளவில் பயன்படுத்தக் கூடாது. மண் பரிசோதனை மற்றும் உள்ளூர் வேளாண் அலுவலரின் பரிந்துரையைப் பின்பற்றவும்.

**5. குறைபாடு வராமல் தடுக்க விவசாயிகள் செய்ய வேண்டியவை**

நடவுக்கு முன் மண் பரிசோதனை செய்துகொள்ளுங்கள். தேவைக்கேற்ப மட்டுமே பாஸ்பரஸ் உள்ளிட்ட உரங்களை இடுங்கள். வயலில் நீர் மேலாண்மையைச் சரியாகக் கையாளுங்கள். பயிரின் வளர்ச்சியைத் தொடர்ந்து கவனித்து, ஆரம்ப அறிகுறிகளிலேயே நடவடிக்கை எடுங்கள். ஊட்டச்சத்துக் குறைபாட்டை நோய் அல்லது பூச்சித் தாக்குதல் எனத் தவறாகக் கருதாமல், தேவையானபோது மண் அல்லது தாவரப் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்துங்கள்.

நிறைவாக, நெற்பயிரில் குள்ளமான செடிகள், பழுப்பு நிறப் புள்ளிகள் மற்றும் குறைந்த தூர்கள் ஆகியவை வெறும் தோற்ற மாற்றங்கள் அல்ல; பயிரின் ஊட்டச்சத்து நிலையை உணர்த்தும் எச்சரிக்கைகளாக இருக்கலாம். துத்தநாகம் சிறிய அளவில் தேவைப்படும் சத்தாக இருந்தாலும், அதன் பற்றாக்குறை பயிரின் வளர்ச்சியையும் மகசூலையும் பாதிக்கக்கூடும்.

தகவல் : ***குளோரி.கே.எஸ் மற்றும் சி.பிரசாத், உதவி பேராசிரியர்கள் (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை), கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.***

# நெல் வயலில் ட்ரோன் மூலம் களைக்கொல்லி தெளிப்பு

## RAWE மாணவர்கள் நேரில் பார்வையிட்டனர்

திருவாரூர், அக்.23

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியத்திற்குட்பட்ட சேந்த மங்கலம், பெரியகுடி கிராமங்களில், விவசாயி செந்தில், நேரடி விதைப்பு நெல் வயலில் ட்ரோன் மூலம் களைக்கொல்லி தெளிக்கும் தொழில்நுட்பத்தை, கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் 4ம் ஆண்டு B.Sc. (Hons.) Agriculture



மாணவர்கள், கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE – Rural Agricultural Work Experience) ஒரு பகுதியாக நேரில் பார்வையிட்டனர்.



விவசாயி செந்தில் வயலில், IR 20 நெல் ரகத்தில், ட்ரோன் மூலம் களைக்கொல்லி தெளிக்கும் முறை குறித்து மாணவர்கள் கள ஆய்வு மேற்கொண்டனர். இச்செயல்பாட்டில், Fenopropethyl 9.35% EC எனக் குறிப்பிடப்பட்ட களைக்கொல்லி, 5 ஹெக்டேர் பரப்பிற்கான பயன்பாட்டுடன் தொடர்புடைய தெளிப்பு நடவடிக்கை குறித்து மாணவர்கள் பார்வையிட்டனர்.

ட்ரோன் தொழில்நுட்பத்தின் மூலம் வயலில் மருந்து தெளிக்கும் முறை, தெளிப்புப் பரப்பை நிர்வகித்தல், தொழிலாளர் தேவையைக் குறைக்கும் சாத்தியம் மற்றும் நவீன வேளாண் தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள் குறித்து மாணவர்கள் அறிந்து கொண்டனர். மேலும், நேரடி விதைப்பு நெல் சாகுபடியில் களைகளைக் கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் பயிர் பாதுகாப்பு மேலாண்மையில் தொழில்நுட்பத்தின் பங்கு குறித்தும் புரிந்துகொண்டனர்.

இந்தக் கள அனுபவம், மாணவர்களுக்கு நவீன ட்ரோன் தொழில் நுட்பம் மற்றும் நேரடி விதைப்பு நெல் சாகுபடி முறைகளைப் பற்றிய நடைமுறை அறிவை மேம்படுத்த உதவியது. இதன் மூலம், விவசாயிகளிடம் தொழில்நுட்பங்களை எடுத்துச் செல்வதிலும், வேளாண் பணிகளை நவீனமயமாக்குவதிலும் ட்ரோன்களின் பயன்பாட்டை மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

## அம்மாபாளையம் கிராமத்தில் வேளாண்மைக் கல்லூரி மாணவர்களின் கிராமத் தங்கல் திட்டத் தொடக்க விழா

பெரம்பலூர், அக்.23

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், அம்மாபாளையம் கிராமத்தில் நாளந்தா வேளாண்மைக் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவர்கள் சார்பில், கிராமத்தில் தங்கிப் பயிற்சி பெறும் திட்டத்தின் (யூபுநிசி) தொடக்க விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவை நான்காம் ஆண்டு மாணவர்கள், சு.பாபு, மு.தரணி தரன், கா.தருண், செ.கபீர்தாஸ், சு.நிர்மல் குமார், கு.ராகுல், மு.ரோஹித், செ.கபீர் தாஸ், ர.சாய்ராம், பா.ஷிகாந்த், கோ.சிவக்குமார் மற்றும் தி.தினகரன் ஆகியோர் ஒருங்கிணைத்து நடத்தினர்.



இப்பயிற்சியானது நாளந்தா வேளாண்மைக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ.வெங்கடபிரபுவின் வழிகாட்டுதலிலும், பாட ஆசிரியரும் வேளாண் விரிவாக்கத் துறை முதுநிலை உதவிப் பேராசிரியருமான ம.மோகன்ராஜின் மேற்பார்வையில், குழு ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் ரா.சிங்காரவேல் மற்றும் உதவிப் பேராசிரியர் முனைவர்.க.அண்ணா சாமி ஆகியோர் ஆலோசனையிலும் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் கிராமத்தில் தங்கி, விவசாயிகளின் சாகுபடி முறைகள், பாரம்பரிய வேளாண் தொழில் நுட்பங்கள் மற்றும் வேளாண் சார்ந்த நடைமுறை அனுபவங்களை நேரடியாக அறிந்து கொள்ள உள்ளனர். மேலும், நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மற்றும் நிலையான வேளாண்மை குறித்த விழிப்புணர்வையும் விவசாயிகளிடையே ஏற்படுத்த திட்டமிட்டுள்ளனர்.

# விளக்குடி பால் சேகரிப்பு மையத்தைப் பார்வையிட்ட RAWE மாணவர்கள்



திருவாரூர், அக்.23

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் உள்ள விளக்குடி கிராமத்தில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த ஊரக வேளாண் பணி அனுபவத் திட்ட (RAWE) மாணவர்கள் பால் சேகரிப்பு மையத்தைப் பார்வையிட்டனர். இந்தப் பார்வையின் போது, மாணவர்கள் பால் சேகரிக்கும் முறைகள், பாலின் தரத்தைப் பரிசோதித்தல், பால் அளவிடுதல் மற்றும் பால் கொள்முதல் நடைமுறைகள் குறித்து அறிந்து கொண்டனர்.

மேலும், பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள், பால் சேமிப்பு முறைகள் மற்றும் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தில் பால் உற்பத்தியின் பங்கு குறித்தும் தெரிந்து கொண்டனர். இந்தக் களப்பயணம், பால் சேகரிப்பு மற்றும் பால் உற்பத்தி தொடர்பான நடைமுறை அறிவைப் பெறவும், கால்நடை வளர்ப்பின் மூலம் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவும் மாணவர்களுக்கு உதவியது.